# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 12294/SCIC/2024**

திருமதி தேவி நாகராஜன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல்துணை ஆணையர் போக்குவரத்து, ....... பொதுஅதிகார அமைப்பு
காவல் துணை ஆணையர் (தலைமையிடம்),
அழகர் கோவில் ரோடு,
மதுரை மாநகர்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **06.04.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 11.05.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 03.06.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.09.2024 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 17.09.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 07.10.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / துணை ஆணையர் (தலைமையிடம்), காவல்ஆணையர் அலுவலகம், அழகர் கோவில் ரோடு, மதுரை என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 06.04.2024 தேதியிட்ட மனுவில் 03.08.2023 அன்று தனது தாயாரையும் எதிர்த்தரப்பு முத்தையாவின் தாயாரையும் விசாரணை செய்து இருவரிடமும் காவல்துறை அறிக்கை

பெற்றுக்கொண்டது. அதில் முத்தையாவில் தாயார் 03.08.2023 அன்று ஆய்வாளருக்கு எழுதிக்கொடுத்த அறிக்கையின் நகல் என்பது போன்ற தகவல்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு P. அசோகன், காவல் உதவி ஆணையாளர், மதுரை மாநகர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு, 11.05.2024, மற்றும் 17.09.2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாகவும், அதனைத்தொடர்ந்து மீண்டும் தற்போது 07.07.2026 தேதியிட்டு இனவாரியான தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 07.10.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

4. மேலும், மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் ஒரு வாய்ப்பளிக்கப்பட்டும், அவர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. **எனவே, இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**(ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12294/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்,
காவல் துணை ஆணையார் போக்குவரத்து,
காவல் துணை ஆணையர் (தலைமையிடம்),
அழகர் கோவில் ரோடு,
மதுரை மாநகர்.

**மனுதாரர்**
திருமதி தேவி நாகராஜன்,
C/O விசாலாட்சி ஆச்சி,
சஷ்டி இல்லம்,
பிளாட் எண்.284,
கே.கே.நகர்,
மதுரை 20

TK/PS